31st March 1969]

கிறது. தேவை என்ற நிலை வரும்போது இவைகளையெல்லாம் வைத்துக் கல்லூரி துவக்கப்படுமா என்று பரிசீலிக்கலாம். மூன்று கோடி ரூபாய் ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்குத் தேவையாக இருக்கிறது. எனவே தான் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கோயமுத்தூரிலே ஏற்கனவே இரண்டு அன்பர்கள் ரூ. 25 லட்சம் கொடுப்பதாக உறுதி சொல்லி கொஞ்சம் ரூபாய் கொடுத்து ஒரு கல்லூரி நடைபெற்று வருகிறது. அப்படி இருக்க நேற்று முன்தினம் மறுபடியும் ரூ. 25 லட்சம் யாராவது கொடுக்க முன்வந்தால் அங்கே ஒரு கல்லூரி அமைக்க யோசிக்கப்படும் என்று சொன்னதாக பத்திரிகையில் வந்திருக்கிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய அரசாங்கம் இதுபோன்ற பிராந்திய கல்லூரிகள் ஐந்து ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு செயற் குறிப்பு வைத்து அதைக் குறித்து மாநில அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்கள். மாநில அரசாங்கம் கோவையில் பல பேர் நன்கொடை தருவதற்குக் காத்திருக்கிற காரணத்தால் மத்திய அரசாங்கத்தின் துணையோடு கல்லூரி ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை கூறிற்று. அதைக் குறித்து மத்திய அரசாங்கம் எவ்விதத் தகவலும் தரவில்லை. சேலத்தில் கூட ஒரு கல்லூரி துவக்க இருப்பதாக ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தோம்.

திரு டி. கே. சுப்பையா : எங்கள் கணக்குப்படி திருச்சியில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது ரூ. 24 லட்சம். அமைச்சர் சொல்கிற படி ரூ. 15 லட்சமாக இருந்தாலும் கூட தனியார் கொடுத்த ஐந்து லட்சமும், இந்த 15 லட்சமும் சேர்த்து மொத்தம் 20 லட்சம் ரூபாய் எந்த வித முடிவும் ஏற்படாமல் தேங்கிக் கிடப்பது நியாயமா ? அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்குள்ள சூழ்நிலையில் மேலும் ஒரு கல்லூரி அவசியமா என்று தான் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில் எட்டுக் கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் நடத்தும் கல்லூரி ஒன்று வேலூரில் இருக்கிறது. இந்தக் கல்லூரிகளில் தேர்ச்சி பெற்று வரும் மருத்துவர்களுக்கு வேலை கொடுக்கிற அளவுக்கு இப்போது வசதிகள், வாய்ப்புகள் இல்லாமல், இருக்கின்றன. மேலும் ஒரு புதிய கல்லூரியைத் திறப்பதற்கு இன்னும் முடிவு எடுக்கவில்லை. கொடுத்திருக்கிற நன்கொடைகள் பொது மக்கள் சார்பில் ரூ. 15 லட்சம் என்றுதான் அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. மேலும் அங்கத்தினர் அதிகமான தொகை சொல்வதற்கான புள்ளிவிவரம் தந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

Allotment of seats in Medical Colleges

* 309 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to allot seats to students in Medical Colleges, region-wise ;

(b) whether there is any opinion expressed in the Supreme Court judgement that it can be implemented ; and

(c) into how many regions it is proposed to divide Tamil Nadu ?

—

வைத்தியக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார- அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிராந்திய வாரியாக வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கும் திட்டம் இருக்கிறதா ?

[31st March 1969

(இ) சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் இதை அமுல் செய்யலாமென கூறியுள்ளதா ?

(உ) தமிழகத்தை எத்தனே பிராந்தியங்களாகப் பிரிக்க திட்டமிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ), (இ) இல்லே.

(உ) இக்கேள்விக்கு இடமில்லே.

Drinking Water Supply Pipe, Tuticorin

* 310 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state--

(*a*) whether there was drinking water scarcity in Tuticorin due to the breakage of drinking water supply pipe in September 1968 ; and

(*b*) if so, the steps taken to meet the scarcity ?

தூத்துக்குடிக்குக் குடிதண்ணீர் வழங்கும் குழாய்.

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தூத்துக்குடிக்கு குடி தண்ணீர் வழங்கும் குழாய், 1968 செப்டம்பரில் வெடித்து குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், இதை தவிர்க்க எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) நீர்வாங்கியின் பெரிய குழாய் இரட்டிக்கப்படும்.

Women and Children Hospital, Egmore

* 311 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state –

(*a*) whether a child was found missing from the Women and Children Hospital, Egmore in September 1968 ; and

(*b*) if so, the action taken thereon?

தாய் சேய் நல அரசாங்க மருத்துவ மனே, எழும்பூர்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னே, எழும்பூர் அரசாங்க தாய், சேய் நல மருத்துவ மனேயிலிருந்து 1968 செப்டம்பரில் குழந்தை ஒன்று காணமல் போனதா ?

(இ) ஆமெனில், அது பற்றி எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். பிறகு குழந்தையைத் தேடி கண்டுபிடித்து பெற்றோர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

(இ) சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டுஉள்ளது.